# அல்லாடியாரின் ஆரிய மத உபாக்யானம்!

Phone No. 4502 — Regd. No. M. 5458
[விலை அணா ஒன்று] — [இலங்கை 10 சதம்]

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. — MALAI MANI
(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்தகம்)

மலர் 1 | சென்னை (16—12—49) | வெளியீடு (17—12—49) | இதழ் 118

## மார்க்ஸீய காலத்தில் மனுதர்மம் விழையும் பிரமீணுத்பர்!

——(o)——

## சட்ட விற்பன்னரின் சாரமற்ற வரட்டு வாதம்!

## வைதீகத்துக்கு வக்காலத்து வாங்கி வகை துறையற்றப் பேச்சு!

அரசியலை வகுக்கவும் நிர்வாகத்தை நடத்தவுந்தானே நாம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம். ஜாதி முறையை யொழிப்பதென்பது நாட்டின் அன்றாட நிர்வாக முறையின் பாற்பட்டதல்ல. இதற்கு முன் எத்தனையோ சட்டங்கள் சமுதாயச் சீர்திருத்தம் சம்பந்தமானவை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் மக்கள் சம்மதம் வாங்கியா நிறைவேற்றினோம். இந்து சமுதாயம் சுக்கு நூறாக சிதைந்து சின்னாபின்னமாகிவிடுமென்றும், இதனைக் கொண்டுவர இச்சபைக்கு அதிகாரமில்லை யென்றும் கூறுவது தினைத்துணையும் பொருத்தமும் நியாயமுமற்றதாகும். அரைகுறையாகவும் முழு நீதியும் வழங்கும் தன்மையற்றதுமாக இம்மசோதா இருக்கையிலேயே இவ்வளவு எதிர்ப்பென்றால் எதிர்ப்பாளரின் வெறி தன்மைதான இதற்குக் காரணம்.

— டாக்டர் பாக்ஷி தேக்சாந்த்

இந்து சமுதாயத்தைச் சீர்திருத்துவதே இம்மசோதாவின் நோக்கம். சட்டசபைகளுக்கு முன்பு சீர்திருத்த மசோதாக்கள் வரும்போதெல்லாம் எதிர்ப்பு இருந்தேதான் வந்திருக்கிறது. சென்னையில் கோயில் நுழையு மசோதாவும், தாழ்த்தப்பட்டோர் சிவில் உரிமை மசோதாவும் கொண்டுவந்தபோதும் எதிர்ப்பு இருக்கத்தான் செய்தது. ஒரு சிலர் மந்திரிகளின் கண்களில் மிளகாய்ப் பொடியைக்கூடத் தூவினர். சரிசமத்துவத்துக்கு வழி செய்கிறது இம்மசோதா. இதற்கேன் இவ்வளவு எதிர்ப்பு என்பது உனக்குப் புரியவில்லையே.

— வி. ஐ. முனிசாமிப்பிள்ளை

இந்து சட்டத் தொகுப்பு மசோதா பற்றிய விவாதம் டிசம்பர் 14-ந் தேதியன்று மத்திய சட்டசபையில் தொடர்ந்தபோது, லாகூர் உயர்நீதிமன்ற (முன்னாள் நீதிபதி) டாக்டர் பாக்ஷி தேகசாந்த் (ஆதித்திராவிடர்) பிரதிநிதி தோழர் வி. ஐ. முனிசாமிப்பிள்ளையும் தந்துரைத்த கருத்துக்களை மேலே எடுத்துக் காட்டியுள்ளோம். வைதீகமும் வர்ணாஸ்ரமும் சரிந்து போகாமல் காப்பாற்ற நினைக்கும் அல்லாடியார் முதல்நாள் பொழிந்து தள்ளியபுரைபட்ட பித்தலாட்டக் கூற்றுக்களுக்கு ஆப்பு தம் சபையிலேயே இவ்விருவர்களுடையவும் [illegible] துரைகளிருப்பதை நேயர்கள் கவனிக்குக் கொண்டுவ ஆசைப்படுகிறோம்.

அல்லாடியாரின் ஆணவ மத வெறியும், [illegible] பாவமும் எந்த அளவுக்கு சேவலமாய்ப் போய்விட்டன வென்பதற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டு! இவர் [illegible] சகாப்தத்திலும் [illegible] பத்தில் பல்லோர் மதநடையிலும் புகழும் பெற்ற [illegible] "அறிவுக்கு ஒவ்வொன்று பெயர்பதற்காக பழங்கால பழக்க வழக்க சம்பிரதாயங்களைப் பலியிட்டு விடுதல் கூடாது" என்று கூறுகிறார் என்றால், சரியும் வைதிகத்துக்கு சப்பைக்கட்டுப்போட அல்லாடியார் அணைத்துக் [illegible] வெளி வந்து விட்டாரென்று தானே கொள்ள

வேண்டும். முந்நால சம்பிரதாயங்களுக்கு-காட்டுமிராண்டித்தன, அநாகரிகக் கோட்பாடுகளுக்கு, சுயநலக் கும்பலின் சுகபோகத்துக்கு வகுத்து வைத்துக்கொண்ட பச்சைச் சூதலாட்டப் பிற்போக்கு கொள்கைகளுக்கு அறிவையப் நீதியையும் பலியிட்டத் துணியும் இத்தகு சமூக விரோதசக்திகளின் கையில் சிக்கிச் சீரழிகிறதே நாடு என நினைக்கும் போது, பொதுப் புள்ளோருக்கு ரத்தக் கண்ணீர் பெருகத்தானே செய்யும்.

மக்களின் மடமையையும் மௌடிகத்தையும் மூலதனமாக வைத்துப் பிழைக்க வேண்டும் சமூகத்தின் உயர்ந்த அந்தஸ்தை [illegible] ஒரு கூட்டமென்பதுதானே அல்லாடியார் வாதத்தின் சாராம்சம். எதற்கெல்லாம் அறிவைப் பயன்படுத்தீர் என [illegible] வைதீக [illegible] காலத்தவராக இற்றைய மக்கள் இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறாரென்றுதானே அர்த்தம். ஆராய்ச்சி செய்யவும், ஆராய்ச்சி [illegible] முறையில் [illegible] உரிமை யில்லாவிட்டால் அமைந்த அறிவினால் யாது பயன்? அறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்து, [illegible] அதைத் தடை செய்ய இவர் யார்? [illegible] வகுத்தில் உலகம் முன்னே

[தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க]

# கம்யூனிஸ்டுகள் தலைமறைவுக்கு தேவன்சென் காட்டும் காரணம்!

## வறுமைக் கொடுமை, வேலையில்லாமையை மறைக்கமுடியாமல் மழுப்பல்!

——(o)——

## சத்தியமும் தர்மமும் விரைவில் நிலவுமென 'ஜோஸ்யம்'!

லண்டன், டிச. 15—

'தொழிலாளர் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளும் சக்தி இந்தியாவுக்கு இருக்கிறது' என்று, இந்திய தேசீய தொழிற்சங்கத் தலைவர் தோழர் தேவன் சென் இந்தியாவுக்குப் புறப்படுமுன் குளோப் நிருபருக்களித்த பேட்டியில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:— சுதந்திர நாடுகளின் தொழிற்சங்க பெடரேஷன் ஏற்பட்டது மிகவும் வரவேற்கப்படவேண்டிய விஷயமாகும். பழைய தொழிற்சங்க ஸ்தாபனம் தோல்வியடைந்தது. அதில் சர்வாதிகார அமுல் ஆதிக்கம் பெற்றிருந்தது என்பதுடன் மட்டுமின்றி, அந்த ஸ்தாபனம் ஐரோப்பா, அமெரிக்க விஷயங்களில் மட்டுமே சிரத்தை காட்டிவந்தது ஒரு காரணமாகும்.

அந்த ஸ்தாபனம் ஆசியாவையும், காலனி பிரதேசங்கள் என்று சொல்லப்படும் நாடுகளையும் கவனிக்காமலேயே விட்டுவிட்டது.

புது ஸ்தாபனம் தன் வேலையை திருப்திகரமாகவே ஆரம்பித்திருக்கிறது. ரீஜனல் ஸ்தாபனங்கள் ஏற்படுத்த முன்வந்திருப்பது மிகவும் போற்றத்தக்க அம்சமாகும். முக்கியமாக இப்பொழுது ஆசிய நாட்டினருக்கு இந்த ஸ்தாபனம் மிகவும் உபயோகமாக இருக்கும்.

இந்தியாவில் கம்யூனிஸ்டுகள் இப்பொழுது தலைமறைவாக மறைந்திருப்பதற்குக் காரணம் தங்களுக்கு வசதியான இடங்களில் கைவரிசை காட்ட சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துதான் இவர்கள் முயற்சி ஒருநாளும் வெற்றி பெறாது. ஏனென்றால் இந்திய கம்யூனிஸத்தின் பலாத்காரத்தை அறவே எதிர்க்கிறது.

வேலையில்லாத் திண்டாட்டம் வறுமையின் கொடுமை இவைகள் அந்த பலாத்கார சக்திகளுக்கு ஆதரவ அளிக்கலாம் என்பதை மறுக்க முடியாதுதான். ஆனால் இந்தியா இப்பிரச்னைகளில் எளிதில் வெற்றிகரமாக தீர்த்துவிடும் சக்தி பெற்றிருக்கிறது. சீக்கிரமே கிழக்கில் இந்தியா பலம் பொருந்திய ஜனநாயக நாடாக தலைதூக்கி சத்தியம், தர்மம் இவைகளின் இருப்பிடமாக விளங்கப்போகிறது என்பதில் சந்தேகமே இல்லை.

—குளோப்.

### இந்தியாவில் எஃகு இறக்குமதி

இவ்வாண்டு ஜனவரி முதல் அக்டோபர் வரையிலான பத்து மாதங்களில் 284,190 டன் எஃகு ரூ 25,89 கோடி ரூபாய் விலையில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறதென்று தொழில்சப்ளை மந்திரி டாக்டர் எஸ். பி. முகர்ஜி மத்திய சட்டசபையில் 14-ந் தேதியன்று அறிவித்தார்.

### "ஆரியமாயை" வழக்கு

திருச்சி, டிச. 14—

"ஆரியமாயை" சம்பந்தமாகத் தோழர் சி. என். அ. அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு, இன்று சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் வரமையினால் ஜனவரி 11-ந் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

கோர்ட்டுக்கு சோமு [illegible] சன்னரன், பி. முனிச்சமி, [illegible] சாம்பசிவம், ஜி. நாராயணன், ஏ. சித்தையன், என். [illegible], ஹனிபா சாயபு, [illegible] சாமி மற்றும் உள்ளூர் [illegible] தோழர்களும் வந்திருந்தனர்.

(சு. நி)

# அணுக்குண்டை விட ஆயிர மடங்கு சக்தி வாய்ந்த 'சூப்பர்' குண்டு!

## அமெரிக்காவில் தயாராகிறதாம்!

வாஷிங்டன், டிச. 15—

சாதாரண அணுக்குண்டை விட ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்த ஒரு அணுக்குண்டை அமெரிக்கா தயாரித்து வருகிறது என்றும், ஒரு குண்டு நியூயார்க் அல்லது வாஷிங்டனை அடியோடு நிர்மூலமாக்கி அழித்து விடும் சக்தி கொண்டது என்றும், செனட்டர் [illegible] அணுசக்திக் கமிட்டி உறுப்பினர் [illegible]

நம் நோபிள் பரிசு பெற்றவருமான டாக்டர் ஹெரால்டு உரே அறிவித்திருக்கிறார்.

இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குள் போர் ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்றும், ஜனநாயக நாடுகள் ஒரு அரசியல் யூனிட்டாக ஒன்று சேர்ந்து ஒத்துழைப்பதின் மூலமே போரைத் தவிர்க்க முடியும் என்றும் இவர் கூறுகிறார்.

# 'இந்தியாவுக்கு சீனக் கம்யூனிஸ்டுகளால் ஆபத்து'

## சர்தார் ஜே. ஜே. சிங் கவலை

'கம்யூனிஸ்டுகள் சீன [illegible] பெருநிலம் முழுவதையும் வசப்படுத்திக் கொண்டதால் [illegible] இந்தியாவினுள்ளும் அவர்கள் நுழையலாமென்பதற்கான ஆபத்து வந்துற்றிருக்கிறது' என அமெரிக்காவில் இந்திய லீகின் தலைவர் சர்தார் ஜே. ஜே. சிங் நியூயார்க்கில் குறிப்பிட்டார்.

வெகு சமீபத்தில், இந்தியாவினுள் நுழைய சீனக் கம்யூனிஸ்டுகள் திட்டமிட்டுள்ளன

### பாகிஸ்தானுக்கு இந்தியா ஆட்சேபக் குறிப்பு

இந்தியாவிலிருந்து [illegible] எல்லாவற்றையும் [illegible] வெளியேற்ற பாகிஸ்தான் [illegible] வருகின்றதாகக் குற்றஞ்சாட்டி இந்திய சர்க்கார் பாகிஸ்தான் சர்க்காருக்குக் குறிப்பொன்று விடுத்துள்ளது.

[illegible] என்று, உறுதியான தகவல்கள் கிடைக்கின்றனவென்று அவர் குறிப்பிட்டார்.

மாலை மணி

சென்னை 16—12—49 வெள்ளிக்கிழமை

# கூட்டுறவுப் பண்ணை

உழவுத் தொழிலும் உணவு உற்பத்திப் பெருக்கமும், மேலை நாடுகளில் வளர்ந்தோங்கி விளங்குவதற்கு முக்கிய காரணம், கூட்டுறவுப் பண்ணைகள் உருவாகி வேலை செய்து வருவதேயாகும்.

தனிப்பட்டவர் களின் கண்காணிப்பின் கீழ்ப் பண்படுத்தப்பட்டுப், பயிர் விளைவிக்கப்பட்ட நிலத்தை விட, கூட்டுறவுப்பண்ணையின் கீழ்க் கண்காணிக்கப்படும் நிலம் நிறைந்த பலனைக், குறைந்த உழைப்பில், சொற்பச்செலவில் தருவதாக அமைந்திருக்கிறது. காரணம், விஞ்ஞானம் வகுத்துத் தந்திருக்கும் அரிய உழவுச் சாதனங்களைப் பயன் படுத்தி, உழவுத் தொழிலை வளர்ச்சியுறச் செய்யும் ஆற்றல் கூட்டுறவுப் பண்ணைக்கு எளிதில் ஏற்பட்டு விடுவதேயாகும்.

கூட்டுறவுப் பண்ணையில் பலரின் உடைமையும்-உழைப்பும் ஒன்றுக்கப்படுகின்றன. ஒன்றுக்கப்படும் உடைமை வசதிகளனைத்தையும் செய்துகொள்ளத் தக்க அளவுக்கு வலிவு பெற்று விடுகிறது; ஒன்றுக்கப்படும் உழைப்பு, தேவையான வற்றை உற்பத்தி செய்து கொள்ளும் அளவுக்குப் பயன் பட்டு வருகிறது. மக்களின் உடைமையையும்—உழைப்பையும் ஒன்று கூட்டும் கூட்டு முயற்சி, விஞ்ஞானம் கற்றுக் கொடுத்துள்ள வழிகளையெல்லாம் கடைப்பிடித்து உழவுத் தொழிலை நல்நிலைக்குக் கொண்டு வந்து, நல்ல பயன் தரத்தக்கதாக ஆக்குகிறது.

கூட்டு முயற்சியின் மூலமாக உருவாகும் கூட்டுறவுப் பண்ணை, உழைப்பைக்குறைக்கிறது—உறுதியைப் பெருக்குகிறது—பட்டினியை மிகுவிக்கிறது[illegible]. ஆகையால்தான் இந்த முறையைப் பெரு அளவில் கடைப்பிடிக்கும் மேலைநாடுகள், நல்ல பலனை அடைந்து வருகின்றன.

நிலத்தைப் பண்படுத்தல்-எருவிடல்-நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளுதல்-விதைவிதைத்தல் - அறுவடை செய்தல் - மணிகளைச் சேர்த்தல் - [illegible] ஆகிய இவற்றையெல்லாம் ஒழுங்குபட-சிறந்த முறையில் பெரு அளவில் செய்ய வேண்டுமாயின், இப்பொழுதுள்ள உலகியல் நிலையில் கூட்டுறவுப்பண்ணைகள் அமைத்து அவற்றின் மூலம் செய்யவும், தெலுங்கு-திராவிட போன்ற விவசாய நாட்டிற்கு ஏற்ற செயலாகும்.

பொதுவாகத்திந்தியத் துணைக் கண்டம், குறிப்பாகத் தமிழ்-திராவிட விவசாயத்தை முக்கியத் தொழிலாகக் கொண்டவையாகும். என்றாலும், இங்கு உழவுத் தொழில் வளர்ச்சியடையவில்லை-உற்பத்தியும் பெருகவில்லை. சொந்தத்தில் பெரும் பண்ணைவைத்து நடத்துவோர் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களாகவும், சிறுசிறு துண்டு நிலங்களைக் கொண்டோர் ஏராள எண்ணிக்கையுடையவர்களாகவும் இந்நாட்டில் இருக்கிறார்கள்! அவர்களெல்லோரும் மிகப் பழங்காலத்திய உழவுச் சாதனங்களைக் கொண்டே உழவுத் தொழிலை நடத்துபவர்களாகவும் இருக்கிறார்கள். உழவைச் சீரிய நிலைக்குக் கொண்டுவர, பெரும்பண்ணைக்காரர்களுக்கு மனமில்லை; சிறு விவசாயிகளுக்கு வசதியில்லை, வழியும் தெரியவில்லை!

இந்நாட்டில் வளமிருந்தும் மக்களுக்கு வசதியில்லை; வகையும் தெரியவில்லை; வழியும் பிறக்கவில்லை.

உழவுத் தொழில் புரிவோர் தமிடமிருக்கும் சிறுசிறுநிலங்களை, இருக்கும் கொஞ்ச சாதனங்களைக் கொண்டு, ஏதாவது பலன் கண்டால் போதும் என்ற அளவிலேயே தொழில் நடத்தி வருவதல்தான், உழவுத் தொழில் வளராமலேயே இருந்து வருகிறது. புதுப்புது நிலங்களைக் காணவோ-இருக்கும் நிலத்தைப் பண்படுத்தி வளமுள்ளதாக்கவோ விளைவைப் பெருக்கவோ இங்குள்ள உழவர்களால் முடியவில்லை. இந்தக் குறைபாடுகள் போகவேண்டுமாயின உழவுத் தொழில் பேணுவோர் ஆங்காங்கு கூட்டுறவுப் பண்ணைகளை, அரசாங்கத்தின் உதவியைக் கொண்டும், முதலிடுவோர் துணையைக் கொண்டும், நிறுவ முற்படவேண்டும். கூட்டுறவுப் பண்ணைகள் ஆங்காங்கு அமைந்த தலைப்பட்டால், விலை அதிகமுள்ள நவீன உழவுக் கருவிகளை வாங்கவும், அவற்றின் மூலம் குறைந்த உழைப்பில், நிலத்தைப் பண்படுத்தவும், விதைத்தல்—அறுப்பு அறுத்தல்-மணிகள் குவித்தல் ஆகியவற்றைப் பெரு அளவில் செய்யவும் வழி பிறக்கும். அப்படிப்பட்ட வழி பிறந்தால் உழவுத் தொழில் உறுதியாக வளர்ச்சியுறும் என்பதில் ஐயமில்லை.

விவசாயக் கூட்டுறவுப் பண்ணை மூலம் உழவுத் தொழில் நடத்த செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மதுராந்தகம் தாலுகாவில், நெல்வாய் என்ற இடத்தில், முன்மாதிரியான முயற்சி ஒன்று எடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. அந்தக் கூட்டுறவுப் பண்ணை சுமார் 400 ஏக்கர் நிலத்தை, 20 ஆண்டுகளுக்குக் குத்தகை எடுத்துக் கொண்டும், சுமார் 50க்கு மேற்பட்ட நிலமில்லாத விவசாயத்தொழிலாளர்களைக் கொண்டும், அவர்களுக்கு வேண்டிய சாதனங்களை வட்டியில்லாக் கடன் மூலம் கொடுத்தும் உழவுத்தொழிலை நடத்த முன் வந்திருப்பது பாராட்டுவதற்குரியதாகும். நேர்மையும்—நாணயமும் கையாளப்படுமானால் முயற்சி வெற்றிபெறக் கூடும்; மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்கக் கூடும். இம்மாதிரியான கூட்டுறவுப்பண்ணைகள் ஏராளமாக ஆங்காங்கு நிறுவப்பெறுமானால், அவை நாளடைவில் பெரும் வலிவு பெறவும், நவீன முறைகளை முழுவதையும் கையாளவும் வசதி ஏற்படும்.

விவசாயக் கூட்டுறவுப் பண்ணைகள் நன்கு நிலைபெற ஆரம்பித்து விட்டால், அவற்றை யொட்டி மாட்டுப் பண்ணை, ஆட்டுப்பண்ணை, கோழிப்பண்ணை போன்றவைகளை இடத்திற்கு ஏற்றபடி நிறுவிக்கொள்ளவும் வசதியும் வாய்ப்பும் ஏற்படும். எனவே கூட்டுமுயற்சியால் நலம்பெற ஆங்காங்கு கூட்டுறவுப்பண்ணைகளை ஏற்படுத்தும் நற்பணியை நம் நாட்டவர்கள் ஏற்று, நடத்த முன்வருவராயின், மக்களும் நலமுறுவர், நாடும் நலமுறும்!

## ஏகாதிபத்திய பித்தலாட்டத்தை மட்டந்தட்டிற்று ரஷியா!

### ஹேக் மாநாட்டினர்க்குப் பாராட்டுதலும் ரஷியாவின் கண்டனமும்

ஹேக்கில் வட்ட மேஜை மாநாட்டின் மூலம் இந்தோனேஷியப் பிரச்னை தீர்க்கப்பட்டு விட்டதாம். இந்தக அரும்பெரும் [illegible] சாதித்ததற்காக அதில் சம்பந்தப்பட்ட கட்சிகளைப் பாராட்டுவதற்காக அண்மையில் ஐ. நா. சபையில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அந்தத் தீர்மானத்தை ரஷியா தனது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி வீழ்த்திவிட்டது.

இதைக்கண்டு முதலாளித்துவ நாடுகள் ரஷியாவைக் குறைகூற ஆரம்பித்து விட்டன. "பாராட்டுவதற்குக்கூட ரஷியா தடை செய்திருக்கிறதே; இதென்ன அநீதி; என்று ஓலமிடுகின்றன. இதுடன் ரஷியா 42 முறை தனது ரத்து அதிகாரத்தைப்பிரயோகித்திருக்கிறது என்று குற்றம் சாட்டுகின்றன.

இந்நிலையில் ரஷியாவின் நோக்கமென்னவென்பதைக் கண்டறிய வேண்டியது கடமையாளர் கடனாகும். தன்னிடம் ரத்து அதிகாரம் இருக்கிறது என்பதற்காக, அதனை [illegible] பயன்படுத்துகிறது ரஷியா என்று யாரும் எளிதில் [illegible] முடியாது. ஒரு பெரிய வல்லரசு இங்ஙனம் அற்பத்தனமாக நடந்துகொள்ளுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தோனேஷிய பிரச்னை தீர்க்கப்பட்டதாகச் சம்பந்தப்பட்ட கட்சியினரைப் பாராட்ட வேண்டுமென்கிறது ஐ. நா. சபை. ஆனால் இந்தோனேஷிய பிரச்னை எவ்வளவு தூரம் தீர்க்கப்பட்டிருக்கிறது. என்பதை ஆராய்ந்தவர்கள் இங்ஙனம் பாராட்டுதல் வழங்க முன்வரார்.

இந்தோனேஷியா முழு விடுதலை அடைந்துவிட்டது என்று யாரும் சொல்லிவிடமுடியாது. ஒருநாடு விடுதலை அடைகிறது என்றால், அந்நாட்டின் மீது அன்னியர் ஆதிக்கம் எதுவுமே இருத்தல் கூடாது. அதுவும் இராணுவ ஆதிக்கம் அறவே கூடாது. அன்னிய இராணுவ ஆதிக்கம் செலுத்தும் வரை அந்நாடு டைக்கும் விடுதலையும் கேலிக்கூத்தாகவே [illegible].

இன்று இந்தோனேஷியா விடுதலை அடைந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அங்கு டச்சுப் படைகள் இன்னும் இருந்துகொண்டுதானிருக்கின்றன. இடைக்காலத்தில் குடியரசினருக்கும், டச்சு அரசாங்கத்தினருக்குமிடையே போர் நிகழ்ந்தபோது டச்சுப் படைகள் குடியரசினரின் எந்தெந்த பகுதிகளைக் கைப்பற்றினவோ, அந்தந்த இடங்களிலேயே இன்னும் இருந்து வருகின்றன. இந்நிலையில்தான் ஹேக் மாநாடு நடைபெற்றிருக்கிறது; இந்தோனேஷியாவுக்கு விடுதலை கிடைத்துவிட்டது என்றும் பேசப்படுகிறது. இந்த இலட்சணத்தில் இந்தோனேஷிய பிரச்னை அறவே தீர்ந்து விட்டது போலவும், அதற்காக ஹேக் மாநாட்டில் பங்கு கொண்டோரைப் பாராட்ட வேண்டும் என்றும் பாரோ சில ஏகாதிபத்தியப் பிரதிநிதிகள் சொல்லுகிறார்கள் என்றால் இந்தப் பித்தலாட்டத்தைக் குறைமிக்க ரஷியா ஆதரவு தரவேண்டுமா என்று கேட்கிறோம். எனவேதான் ரஷியா தனது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தப் பித்தலாட்டத்தை மட்டந்தட்டிற்று. இதிலென்ன குற்றம்?

ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குக் காரணம் கூறுகையில், ரஷியா, "போர் நிறுத்தம் ஏற்படுவதற்கு முன்னிருந்த எல்லைகளுக்கு டச்சுப்படைகள் வாபசாக வேண்டுமென அமைப்புதி ஐ. நா. கமிஷன் சிபாரிசுகளை [illegible]" என்று குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

எனவே, ரஷியா தனது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தியது தவறு என்று எவ்வகையிலும் கூறமுடியாது என்பதை ஏகாதிபத்திய, முதலாளித்துவ வெறியர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

### மத்திய கிழக்கு நாடுகளுடன் யு. எஸ். ஒப்பந்த முயற்சி

#### அரபுகளின் சிரத்தை

கெய்ரோ, டிச. 15—

எகிப்து, லெபனான், சிரியா ஆகிய மத்திய கிழக்கு நாடுகளுடன் புதிய அமெரிக்க ஸ்டேட்ஸ் [illegible] செய்து கொள்ள முயற்சிக்கும் ஒப்பந்த விஷயமாக அரபுகள் அதிக சிரத்தை காட்டுகின்றன என்று குளோம் கிருபர் கூறினார்.

இந்த நாடுகளுடன் யுனைட்டெட் ஸ்டேட்ஸ் ஒப்பந்தம் செய்து கொள்ள சோவியத் [illegible] [illegible] காணப்படுகின்றனவே [illegible] மத்திய கிழக்கு [illegible] விஷயமாகத் தனிப்பட்டதும் எதுவும் அவைகளில் காணப்படவில்லை என்று கூறப்படுகிறது.

## அறிவுக் கதிர்!

—எல்லா அதிகாரங்களுமுடைய தனி அரசு ஒன்று சுயேச்சையாகவும், உறுதியாகவும் வெளியிடும் ஆணையே சட்டம் எனப்படும். ஆனால் அதுமட்டுமே சட்டமாகி விடாது. அது ஒவ்வொரு நாட்டிற்குரிய நிலைமைகள், சமய சந்தர்ப்பங்கள் ஆகியவற்றினின்று எழுதவதொன்றாகும். ஒவ்வொரு பொருளும் அதனதன் இயல்புக்கும், நிலைமைக்கும் ஏற்ற சட்டமொன்றுண்டு. மனிதன், அவன் வாழும் நாட்டு அமைப்பு, தட்பவெப்பநிலை, வழக்க பழக்கவழக்கங்கள் ஆகிய சூழ்நிலைகளையே பெரிதும் சார்ந்திருக்கிறான். அவற்றை யொட்டியே சட்டதிட்டங்கள் அமைகின்றன. அங்ஙனமாக அமையும் சட்டதிட்டங்களே இயற்கையானவை. அவ்விதமாகப் பொருந்தும் அரசாங்கமே இயற்கையான அரசாங்கமாகும்..

—மொண்டெஸ்கியோ

## இனி நடப்பவை

மணப்பாறை:—திவ்லூர் தி. மு. க. [illegible] விழா, 17—12—49 சனி மாலை 6-30 மணிக்கு [illegible] மாரியம்மன் கோவிலருகில் நடைபெறும். அதுபோது தோழியர் ஆ. இராமாமிர்தத்தம்மையார் தலைமையில் தோழர்கள் டி. கே. சீனிவாசன், எஸ். செமோறன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

சேலம்:— அம்மாபேட்டை மெயின் ரோடு தி. மு. க. [illegible] சார்பில் 18—12—49 ஞாயிறு இரவு 8-மணிக்கு சொற்பொழிவுக் கூட்டம் நடைபெறும். 'கலை' எனும் பொருள்பற்றிப் பலர் பேசுவார்கள்.

* * *

மாயவரம்:—18-12-49 ஞாயிறு மாலை 5-மணிக்கு தோழர் பழனிச்சாமி அவர்கள் கடையில் மாயவரம் நகர [illegible] அமைப்புக் குழு ஒன்று கூடும். எல்லாத் தோழர்கள் வருகை தருமாறு வேண்டப்படுகிறார்கள்.

* * *

திருச்செங்கோடு:—18—12—49 மாலை 6-மணிக்கு [illegible] மாடியில் [illegible] தி. மு. க. சொற்பொழிவுக் கூட்டம் நடைபெறும். "சமதர்மம்" என்ற தலைப்பில் பலர் பேசுவர்!

* * *

ஈரோடு:—ஈரோடு முனிசிபல் ஆரம்பப்பள்ளி ஆசிரியர் [illegible] 8-வது ஆண்டு விழா 18-12-49 ஞாயிறு மாலை 4 மணிக்கு நடைபெறும். தோழர் எஸ். கே. சென்னியப்பன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார். தோழர் கே. என். குப்புசாமி அவர்கள் விழாவை ஆரம்பித்து வைப்பார்.

## ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம்

சென்னை, டிச. 15—

சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றத்தின் சார்பாகச் சிறப்புக் கூட்டம் ஒன்று 16—12—49 வெள்ளியன்று மாலை 6 மணிக்கு நடைபெறும். அதுபோது, தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் "உலகப் புகழ்" [illegible] பற்றிப் பேசுவார்கள் அனைவரும் வருக!

(ச.)

## சுரண்டல் ஒழிக!

மக்களில் மிகப் பெரும் பான்மையோர் வறுமையிலும் அறியாமையிலும் கிடந்து உழலும்போது, அவர்களைச் சுரண்டி ஒரு சிலர் இனியும் அதிக காலம் உல்லாசமாக வாழ முடியாது. சமுகத்தில், குமுறும் எரிமலை மீது இருப்பது போல் இன்று நாம் இருக்கிறோம். இந்த எரிமலை வெடிக்காமல் நாம் பார்த்துக் கொள்ளவேண்டும்.

—ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்

## அணுசக்தி பெருக்க உடன்படிக்கை

லண்டன், டிச. 14—

[illegible] அதிலிருக் [illegible] பிரிட்டன், கனடா இம் மூன்று நாடுகளிடையே உடன்படிக்கை [illegible] என்றும், அடுத்த ஆண்டு [illegible] பத்தில் [illegible] காங்கிரஸின் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிகிறது.

முன்பு [illegible] யோர்க்காலத்தில் இருந்தது போல் அணு குண்டு தயாரிக்கும் [illegible] ஸ்டேட்ஸ் விடமே [illegible] இருந்து வரும் என்றும், பிரிட்டனும், கனடாவும் தேவையான மூலப்பொருள்களைக் கொடுத்து உதவும் என்றும் தெரிகிறது.

## ரிக்ஷாத் தொழிலை ஒழிக்க ரங்கூன் முடிவு

ரங்கூன், டிச. 14—

1951-ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் ரங்கூன் நகரில் ரிக்ஷாக்கள் எடுக்கப்பட்டு விடும் என்று தெரிகிறது.

போர் முடிந்தபின் ரிக்ஷாக்களைச் சிறுக சிறுக எடுத்து விடுவதென்று ரங்கூன் கார்ப்பரேஷன் முடிவு செய்திருந்தது. அப்பொழுது 3000 ரிக்ஷாக்கள் இருந்தன. 1950-ல் 500 ரிக்ஷாக்களுக்கு [illegible] லைசென்ஸ் அளிக்கப்பட்டது. இப்பொழுது அநேக பர்மியர்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

## சீனாவில் கொரில்லாப் போர்

ஹாங்காங், டிச. 14—

சீனாவிலுள்ள [illegible] மாகாணமும் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து கொண்டதால் சிகாங், சிங்காய் மாகாணங்கள் இரண்டுமே சீனத் தேசீயப் படைகள் வசம் இருக்கின்றன. இவைகளிலிருந்து கொரில்லாப் போரை நடத்துவதென்று சியாங் படைகள் தீர்மானித்திருக்கின்றனவாம்.

சிகாங் மாகாணம் திபேத்தை ஒட்டியுள்ள மலைப் பிரதேசமுள்ள மாகாணமாகும்.

### புயல் நிவாரண உதவி

விசாகப்பட்டினம், கிருஷ்ணா, [illegible] கோதாவரி, குண்டூர், கிருஷ்ணா ஆகிய மாவட்டங்களில் புயலால் பாதிப்புண்ட பகுதிகளுக்கு [illegible] குறைந்த [illegible] சென்னை சர்க்கார் உத்தரவு [illegible] த்திருக்கின்றனர்.

# இந்தியாவுக்குதவுக; இன்றேல் கம்யூனிசம் புகுந்துவிடும்

## கெரன்ஸ்கிக்கு நேர்ந்த கதியே நேருவுக்கும் வருமாம்

### 'அப்ஸர்வர்' பத்திரிகையின் அலறல்

"தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு வெளி தேசங்களிலிருந்து ஏராளமான பொருளாதார உதவி கிடைக்க வேண்டும். இல்லையேல் கம்யூனிசத்தை தெ. கி. ஆசியத் தலைவர்கள் முறியடிக்க முடியாது. பிறகு பண்டித நேருவுக்குக் கூட கெரன்ஸ்கியின் கதிதான் ஏற்படும்."

"ஆசியாவைப் புறக்கணித்து ஐரோப்ப-அமெரிக்க வர்த்தக உறவைச் சீர்படுத்தினால் போதாது. ஆசிய [illegible] அரசியல் நிலைமை பற்றி [illegible] பேசுகிறார்கள் தவிர, ஆசியாவுக்கு ஒரு மார்ஷல் திட்டத்தை வகுப்பது பற்றி கவனம் செலுத்தப்படவில்லை: இந்தியாவுக்கு அமெரிக்கா நேரடியாக உதவி புரிய வேண்டும்."

என்று பிரிட்டிஷ் வாரப் பத்திரிகைகளில் முக்கியமான பத்திரிகை எனக் கருதப்படும் "அப்ஸர்வர்" பத்திரிகை எழுதியிருக்கிறது. [illegible] பிரிட்டிஷ் முதலாளித்துவ [illegible] மேல் பிறர் [illegible] தென்கிழக்கு ஆசிய நாடு [illegible] என்று அப்பத்திரிகை பொதுவாகக் குறிப்பிடாது இந்தியாவையே குறிப்பதாகும். இந்திய பிரிட்டிஷ்-அமெரிக்க முதலாளிகள் கண்ணில் பட்டவண்ணமே இருக்கிறது. தெ. கி. ஆசிய நாடுகளுக்கு ஏராளமாக பொருளுதவி செய்ய வேண்டுமாம். ஆ! என்ன கருணை! இக்கருணை காலம் [illegible] கருணை இப்பொழுது ஏன் தோன்றிற்று? பொருளாதார உதவி செய்ய வேண்டுமென் [illegible] இன்று [illegible] அமெரிக்காவுக்கு போதனை செய்யும் இவ்வேடு இந்தியாவின் பொருளாதார பிரிட்டிஷார் சுரண்டப்பட்ட [illegible] இந்தியா மீது கருணை [illegible]—?

என்ற இப்ப [illegible] தலைப்பு [illegible] "அப்ஸர்வர்" [illegible] அப்படிக்கே அவ் [illegible] [illegible] பொருளாதார [illegible] முறைகள் [illegible] இதுவா? அதுதான் சிந்திக்க வேண்டிய விஷயம்.

தெ. கி. ஆசியாவுக்கு ஏராளமான பொருளாதார உதவி கிடைக்க வேண்டும் என [illegible] அப்பத்திரிகை [illegible] இந்தியா [illegible] மக்கள் வறுமையில் உழல்கின்றனர் என்று சொல்கிறது [illegible] இல்லை; பின் என்ன [illegible] இந்தியாவின் பொருளாதார [illegible] சரியாக இல்லாவிட்டால் [illegible] அந்த கம்யூனிசம் [illegible] ஜனநாயக இந்தியாவுக்கு [illegible] கொன்ஸ்கியின் கதிதான் ஏற்படும்! [illegible] இந்தியாவில் கம்யூனிசம் [illegible] சுலபம், [illegible] சொல்லலாம். 'அப்ஸர்வர்' மேலும் கூறுகையில் இந்தியாவுக்கு 'அமெரிக்க நேரடியாக உதவவேண்டும்' என்கிறது. ஏன், அமெரிக்காவுக்கு இந்தியாவினால் லாபம் இருக்கிறது. இங்கிலாந்துக்கு அமெரிக்காவினால் லாபம் இருக்கிறது. இந்தியாவில் கம்யூனிசம் புகுந்து [illegible] விட்டால் [illegible] அமெரிக்காவுக்கு இந்தியா ஒரு நல்ல மார்க்கெட்டாக இருக்க முடியாது [illegible].

ஆகவே, ஆங்கிலோ-அமெரிக்க [illegible] இந்தியா ஏகாதிபத்திய [illegible] இருக்கும்படி செய்ய [illegible] முயற்சிகள் [illegible] என்பதையே இது காட்டுகிறது. மேலும் அப்பத்திரிகை பண்டித நேருவின் [illegible] இப்பொழுது [illegible] பூர்த்தி [illegible] தெளிவாகிறது. பண்டிதர் [illegible] நிலைமையில் இந்திய [illegible] முறை இருக்கிறதை அப்சர்வர் விரும்புகிறது. பண்டிதர் [illegible] பணமுடைகளை [illegible] தருகு [illegible] [illegible].

எனவே அப்சர்வரின் [illegible] ஆய்ந்து பார்க்கின்றபோது, மற்ற நாடுகளை மார்ஷல் திட்ட [illegible] பயனால், இ [illegible] [illegible] மார்ஷல் திட்டம் இல்லாட்டில் [illegible] மேல் நாடுகளில் கம்யூனிஸ எதிர்ப்பு சக்தி வளருவது [illegible], இக்கட்டும் [illegible] அப்படிப்பட்ட [illegible] அத்தனை நாடுகளில் வளர்ந்து வரும் கம்யூனிசம், இந்தியாவில் மார்ஷல் திட்ட [illegible] செய்வதைப் பார்க்க [illegible] தன்னுடைய [illegible] இதை [illegible] கம்யூனிசத்தை [illegible] அச்சம் [illegible].

### உறக்கமற்றோர் அவதி தீர...!

நியூயார்க், டிச. 14—

தூக்கம் வராமல் அவதிப்படுவர்களின் குறையை தீர்ப்பதற்காக, தூக்கம் வர 600 வழிகள் இருக்கின்றனவென்றும், அவை எவைஎவை யென்றும் விளக்கும் ஒரு பெரிய கடை [illegible] நகரில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

தூக்கத்தில் படுத்த [illegible] மணம் (வாசனை) இருக்கிறதாம். தூக்கம் வரவழைக்க [illegible] விதம் என்ன என்பதை விளக்கும் ரிக்கார்டு ஒன்று இருக்கிறது.

கதகதப்புடன் [illegible] தூங்க [illegible] தலையணைகளும் போர்வைகளும் இருக்கின்றன. தொட்டில் போல [illegible] ஆடும் நூதன மெத்தையொன்றும் இருக்கிறதாம். பெண்களுக்கென்றே பிரயோகமான சில வசதிகள் இருக்கின்றனவாம். இவையெல்லாம் அந்தக் கடையில் [illegible] வைக்கப்பட்டிருக்கின்றன.

### பிரிட்டிஷ் தேர்தல்

லண்டன், டிச. 14—

இப்பொழுது சாமான்ய சபையிலுள்ள சுமார் 60 உறுப்பினர்கள் தேர்தலுக்குப் பின் மீண்டும் உறுப்பினர்களாக இருக்க மாட்டார்கள் என்று லண்டனில் கூறப்படுகிறது. [illegible] ஒரு காரணத்திற்காக விலகிக் கொள்பவர்களின் எண்ணிக்கை சில நாட்களாக அதிகரித்து வருகிறது.

விலகத்தீர்மானித்திருப்பவர்களில் பெரும்பாலோர் மிகவும் வயதானவர்கள். சர்வகலா பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டு விட்டதாலும், சில தொகுதிகள் மாற்றி அமைக்கப்பட்டிருப்பதாலும், அநேக உறுப்பினர்களுக்கு, தேர்தலுக்கு நிற்கவே தொகுதிகள் கிடைக்காமலிருக்கிறது.

23 பெண் உறுப்பினர்களில் [illegible] மட்டுமே மீண்டும் தேர்தலுக்கு நிற்பதில்லை என உத்தேசித்திருக்கிறார். [illegible] மார்க்டனுவல் [illegible], [illegible], சார்லஸ் எட்வர்ட்ஸ், [illegible], லிட்டில், வொனுன், பார்க்கர், [illegible] ராம்ஸே, [illegible] ஆகியோர் விலகுவர் என்று தெரிகிறது.

### 'ஏகாதிபத்யத்தின் சின்னமே கிறிஸ்துமஸ்'

#### கிழக்கு ஜெர்மன் சர்க்கார் முடிவு

பெர்லின், டிச. 14—

கிறிஸ்துமஸ் ஏகாதிபத்தியம், முதலாளித்துவம் ஆகியவற்றின் சின்னம் என்றும், ஆகவே அதைக் கொண்டாடுவதில்லை என்றும் கிழக்கு ஜெர்மன் சர்க்கார் தீர்மானித்திருக்கிறது. கிறிஸ்துமஸ் சம்பந்தப்பட்ட பெயர்கள் எல்லாம்கூட நீக்கப்பட்டுவிடுமாம். (குளோப்)

### திருத்தம்

"மாலை மணி" (சென்னை 3-12-49 வெளியூர் 14-12-49) இதழில் வெளிவந்துள்ள [illegible] அறிக்கையில், "தமைப்பாளர், திராவிட முன்னேற்றக் கழகம்" என்றிருப்பதை "அமைப்பாளர், திராவிட மணவர் முன்னேற்றக் கழகம்" என்று திருத்திக்கொள்க. (ஆ-ர்)

### "புதிய சர்க்கார் நீடிக்குமா?"

[illegible], டிச. 14—

[illegible] சீனக் கம்யூனிஸ்ட் சர்க்காரை அங்கீகாரம் செய்வது நிச்சயம் என்றும், அது உடனேயே இருக்கும் என்று சொல்ல முடியாதென்றும் இங்குள்ள விமர்சகர்கள் கூறுகிறார்கள். கோமிங்டாங் [illegible] சீன கம்யூனிஸ்டுகள் அதிககாலம் பதவியிலிருப்பார்களா என்று விமர்சகர்கள் சந்தேகப்படுகின்றனர். கம்யூனிஸ்டுகள் இப்பொழுது வெற்றி பெற்றிருப்பது 1911-ல் ஆரம்பமான சீனப் புரட்சியில் ஒரு கட்டமே என்று மாஞ்செஸ்டர் கார்டியன் எழுதுகிறது. (குளோப்)

### பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தில் ஐ. நா. தலையிடுக்கூடாதாம்

சிங்கப்பூர், டிச. 11—

பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தில் ஐ. நா. தலையிடுவதை சிங்கப்பூர் வரவேற்றது என்றும் [illegible] ஏற்படாத [illegible] தகவல் சேகரிக்க ஐ. நா. ஏற்படுத்தியிருக்கும் விசேஷ கமிட்டி தேர்தலில் பங்கெடுத்துக் கொள்ள முடியாது என்று பிரிட்டிஷ் [illegible] கூறியது மிகவும் சரியென்று சிங்கப்பூர் முனிஸிபல் கமிஷனர் [illegible] கூறியிருக்கிறார்.

ஐ. நா. உதவியின்றியே மக்களின் குறைகளை தீர்த்துக்கொள்ள முடியும் என்று தொழிற் சங்கத் தலைவர் லிம் கூறினார்.

### திருவள்ளுவர் கலைக் கண்காட்சி

#### திருவள்ளுவர் தமிழ்க் [illegible] வேண்டுகோள்

திருச்சி, டிச. 14—

"ஸ்ரீரங்கம் நகராண்மைக் கழக [illegible] 21-12-49 முதல் தொடர்ந்து நடக்கவிருக்கும் அகில இந்திய சுதேசி, விவசாய, [illegible] தொழில் பொருட்காட்சிசாலையில் எங்கள் திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் 'திருவள்ளுவர் கலைக் கண்காட்சி அரங்கு' ஒன்று அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களிடமிருந்து [illegible] கருத்துக்களை பரப்பும் நோக்குடன் [illegible] கருத்துக்கள் பொறித்த அட்டைகள் [illegible] தண்டுப் விரசம், [illegible] வெளியீட்டுகள் [illegible] [illegible], ஆராய்ச்சிகள், [illegible] கருத்துச்செறிந்த கண்கவர் [illegible] ஆகியவற்றை நக [illegible] அரங்கில் அமைக்க ஏற்பாடு செய்து வருகிறோம். தமிழ்நாட்டின் [illegible] அன்பர்களும், தமிழ்க் கழகங்களும் திருவள்ளுவர் சங்கங்களும் [illegible] வெளியீட்டுகளும் [illegible] [illegible], மேற்கண்டவைகளில் வெளியீடுகளையும், கருத்துக்களையும் கழகச் செயலாளர், திருவள்ளுவர் தமிழ்க் கழகம் திருப்பராய்த்துறை [illegible] அனுப்ப வேண்டுகிறோம்" என்று [illegible] மா. கே. நடராசன் அறிக்கை விடுத்திருக்கிறார்.

### பம்பாயில் அகதிகள் காலனி

பம்பாய், டிச. 15—

அகதிகளுக்கான வீடுகள் [illegible] வேலை திருப்திகரமாக நடைபெற்று வருகின்றனவென்று பம்பாய் சர்க்கார் அகதிகள் விவகார இலாகா அதிகாரி ஒருவர் [illegible] நிருபரிடம் கூறினார்.

கல்யாண் அகதிகள் முகாம் [illegible] காலனியாகவே மாறுகிறது [illegible], இதுவரை 400 வீடுகள் கட்டி முடிந்து விட்டன என்றும், முகாமில் 450 வீடுகள் [illegible] கட்டப்பட்டு விட்டனவென்றும் அவர் கூறினார்.

# தி. மு. கிளை கழகங்கள்

———:0:———

## யாழ்ப்பாணம்—கிளை

யாழ்ப்பாணம், டிச. 9—

யாழ்ப்பாணம் திராவிட முன்னேற்றக்கழக அமைப்புக் கூட்டம், 11-49-ல் தோழர் சி. கணபதி தலைமையில் நடைபெற்றது. தி. மு. கழகம் நிறுவவேண்டிய அவசியம் குறித்தும், அதன் பலம் யாழ்ப்பாணத்தில் செய்ய வேண்டிய தொண்டு பற்றியும், இளைஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். பின்னர் "திராவிடமுன்னேற்றக்கழகம்—யாழ்ப்பாணம் கிளை" அமைக்கப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழுவினர் தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—சி. செல்வத்துரை; துணைச்செயலாளர்:—கே. சி. நடராச; பொருள் உறுப்பினர்கள்:—என். கணேசலிங்கம், எம். ராசலிங்கம்; ஏனைய செயற்குழுவினர்:—பி. ஐயம்பிள்ளை, கே. சின்னதுரை, வி. சிவராசன், என். சோமையப்பன், கே. ராசலிங்கம், கே. ரகுநாதன் ஜே. சிவஞானசுந்தரம், ஆர். ராசராசா, கே. டி. ஜீவசேகரன், கே. பசுபதி என். நடேசலிங்கம். மேற்படி கழகத்தின் இரண்டாவது கூட்டம் 21-11-49-ல் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தின் பாகங்களிலிருந்தும் ஆர்வமுள்ள இளைஞர்களும், பெரியோர்களும் வந்திருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் உட்கிளைகள் நிறுவுவதற்கென ஏற்பாடுகள் செய்ய, அமைப்பாளர்களாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

என். பி. இராசதுரை (யாழ்ப்பாணம் பகுதி); க. பசுபதி (பருத்தித்துறைப்பகுதி) சி. செல்வத்துரை (கோப்பாய்ப் பகுதி) என். வட்டணம் (வட்டுக்கோட்டைப் பகுதி); வி. சிவராசன் (காங்கேசன்துறைப் பகுதி). (செ-ர்)

• • •

## பொத்தனூர்—சிற்றூர்க்கிளை

பொத்தனூர், டிச. 6—

5—12—49 அன்று தோழர் சிவப்பிரகாசம் அவர்களின் "இளங்கோ இல்லத்தில்" திராவிட முன்னேற்றக் கழகம்—பொத்தனூர் கிளை நிறுவப்பட்டது. பின் கீழ்க்கண்ட செயற்குழு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர், பொருள் உறுப்பினர்—கு. பெருமாள், துணைச் செயலாளர்—இரா. சண்முகம், விளம்பர உறுப்பினர்—ஆறுமுகம். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:- க. சிவப்பிரகாசம் (அமைப்பாளர்) மலை. செகந்நாதன், வெ. வேலாயுதம், ஓ. மு. கந்தசாமி, கா. சோ. துரைசாமி, ஆ. வையாபுரி, பி. ஆர். இராமலிங்கம், கா. ஆண்டியப்பன், கா. சுப்பிரமணியன், க. செங்கோடன்.

• • •

## சோர்ப்பனந்தல்-சிற்றூர்க்கிளை

தி. சோரப்பனந்தல், டிச. 1—

இவ்வூர் திராவிடர் கழகச்செயற்குழு கூட்டம், 22 11-49 மாலை 6 மணிக்கு தோழர் எம். கே குருசாமி தலைமையில் நடைபெற்றது. அப்போது இவ்வூர் திராவிடர் கழகம் "திராவிட முன்னேற்றக் கழகம்—தி. சோரப்பனந்தல் சிற்றூர்க்கிளை" என மாற்றியமைக்கப்பட்டு, கீழ்க்கண்ட புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- எம். கே. குருசாமி, துணைச்செயலாளர்- எம். கண்ணன், பொருள் உறுப்பினர்- ஏ. ராமசந்திரன், விளம்பர உறுப்பினர்- ஆர். சங்கரன். ஏனைய செயற்குழுவினர்:- ஆர். ராமன், சி. டகசி, முத்து, தம்பு, பி. முனுசாமி, ..., வரதராஜு, எம். நாராயணன், எம். ராமு, ஆர். நாராயணன், மண்ணு, கே. மண்ணு, ஏ. ...சாமி, கே. ரங்கநாதன்

மாவட்டக் கழகப்பிரதிநிதிகள் எம். கே. குருசாமி, எம். கண்ணன்.

* * *

## பரமத்தி—சிற்றூர்க்கிளை

பரமத்தி (கரூர் தாலுகா), டிச. 4—

3—12—49 மாலை, பெட்டிக்கடை பி. எஸ். சின்னப்பா அவர்கள் இல்லத்தில், பி. எஸ். சின்னப்பா அவர்கள் தலைமையில் கூடி, "திராவிட முன்னேற்றக் கழகம்—பரமத்தி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—பி. எஸ். சின்னப்பா, துணைச் செயலாளர்:—ஆர். பெரிய நம்பி; நிதி உறுப்பினர்:—கே. கண்ணையன், விளம்பர உறுப்பினர் எஸ். பெரியசாமி. ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—பி. ராசு முத்து, ப. ப. தண்டபாணி, மலையன், எம். வாசர்லம் பி, எம். தனராஜ்.

* * *

## புகளூர்—சிற்றூர்க் கிளை

புகளூர், டிச. 6

1-12-49-ல் இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—புகளூர் (சர்க்கரை ஆலை) சிற்றூர்க் கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- கே. கே. சாமி, துணைச்செயலாளர்-எ. முத்துசாமி; நிதி உறுப்பினர்- கே. சுப்பராயன்; விளம்பர உறுப்பினர்- டி. பி. வடிவேலு. ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்— கே. முத்துக்குமரன், பி. நல்லசாமி, பி. எஸ். தண்டபாணி, டி. பாலகிருஷ்ணன் எஸ். கே. அப்துல்காதர், எம். பழனியாண்டி, டி. ஆர். முத்துசாமி, எம். சின்னமலை, ஜி. சின்னுசாமி. (செ-ர்)

* • *

## கொடைக்கானல்-நகரக்கிளை

கொடைக்கானல், டிச. 1—

இவ்வூர் திராவிடர் கழக செயற்குழு கூட்டம், 28-11-49 அன்று தோழர் எஸ். சி. அப்துல்காதர் தலைமையில் நடைபெற்றது. ஏராளமான இயக்கத் தோழர்கள் கூட்டத்தின் முடிவைக் காண வந்திருந்தனர். மாலை 3 மணிக்கு கூட்டம் ஆரம்பித்தது. பெரியார் திருமணத்திற்குப் பின் இதுவே முதற்கூட்டம். தோழர் எஸ். சி. அப்துல் காதர் பெரியாரின் பொருந்தா மணத்தைக் குறித்து பேசியபின், பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவால் (ஓட்டின் மூலம்) இந்தத் திராவிடர் கழகம் "திராவிட முன்னேற்றக் கழகம்—கொடைக்கானல் நகரக்கிளை" என மாற்றியமைக்கப்பட்டது. பிறகு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எஸ். சி. அப்துல் காதர்; பொருள் உறுப்பினர்:- அழகர்சாமி, விளம்பர உறுப்பினர்: ஆர். ஜெ. சவுந்தரபாண்டியன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம், அதன் தொண்டு ஆகியவற்றை பற்றி தோழர் எம். கே. நீண்டநேரம் பேசினார். முடிவாக சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, கூட்டம் இனிது முடிவுற்றது. (வி. உ.)

* * *

## அங்கலக்குறிச்சி-சிற்றூர்க்கிளை

அங்கலக்குறிச்சி, டிச. 1—

30-11-49 அன்று, மாலை பொள்ளாச்சி தோழர் பி. என். இராமனுஜம் அவர்கள் தலைமையில், தி. மு. க. ஆதரவாளர்கள் கூட்டம் நடைபெற்றது. பின்பு, "திராவிட முன்னேற்ற கழகம் அங்கலக்குறிச்சி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு பின்பு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— ஏ. சி. மயில்சாமி, துணைச்செயலாளர்:- ஏ. எம். ராமன், நிதி உறுப்பினர்:- ஏ. எம். காளிமுத்து, விளம்பர உறுப்பினர்: ஏ. டி. நஞ்சப்பன்-ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:- ஏ. எம். மாணிக்கம், ஏ. கே. பொன்னுசாமி, ஏ. எஸ். மைதீன்பாட்சா, ஏ. எஸ் காஜாமைதீன், ஏ எஸ். நாச்சிமுத்து ஏ. ஜெ. காதர்பாட்சா, ஏ. எஸ். நடராஜன்.

* * *

## ஆறகளூர்—சிற்றூர்க்கிளை

ஆறகளூர் (சே. மா) டிச, 6—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம், 4—12—49ல் தோழர் உ. கே. ஆழ்வார் அவர்கள் சிற்றுண்டி நிலையத்தில், தோழர் ஏ. சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. அது போது, "திராவிட முன்னேற்றக் கழகம்—ஆறகளூர் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்-டி. கே. ஆழ்வார், துணைச் செயலாளர்-கே. கே. சிதம்பரம், பொருள் உறுப்பினர்-ஏ. எம். செல்லமுத்து, விளம்பர உறுப்பினர் எஸ். ஆர். சென்னியன். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்-எம். எம். ஏ. ஜீவானந்தன், எம். சக்திவேல், பி. வெங்கடாசலம், டி. சி. காமநாதன், எம். கே. அய்யாக்கண்ணு.

பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி. உ.)

* * *

## பாவூர்சத்திரம்—சிற்றூர்க்கிளை

பாவூர்சத்திரம், டிச. 6—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம், 4—12—49-ல் தோழர் நடராசக் கண்ணு தலைமையில் நடைபெற்றது. அதுபோது, "திராவிட முன்னேற்றக் கழகம்—பாவூர் சத்திரம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—லோகநாத பாண்டியன்; துணைச்செயலாளர்- சீனிவாசகம்; பொருள் உறுப்பினர்- தேவதாஸ் செல்லத்துரை; விளம்பர உறுப்பினர்- சி. நடராசன் ஏனைய செயற்குழுவினர்— கா. தலைவர், வெள்ளச்சாமி, தங்கசாமி, வே. செல்லக்கனி, தங்கையா எஸ். மாடசாமி, தங்கரத்தினசாமி, அல்லாபிச்சை, கா. குற்றாலலிங்கம், அ. நடராக்கண்ணு. (வி-உ)

* * *

## மணலூர்ப்பேட்டை-சிற்றூர்க்கிளை

மணலூர்ப்பேட்டை, டிச. 7—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் 6—12—49-ல் தோழர் என். கோவிந்தசாமி தலைமையில் தோழர் ஏ. பெருமாள் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. தோழர்கள் கோவிந்தசாமி, துரைசாமி, ஆகியோர் தி. மு. க. அவசியத்தைக் குறித்துப் பேசினர். பின்பு "திராவிட முன்னேற்றக் கழகம்— மணலூர்ப்பேட்டை சிற்றூர்க் கிளை" நிறுவப்பட்டு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- அ. துரைசாமி; துணைச்செயலாளர்- கே. சி. தண்டபாணி; பொருள் உறுப்பினர்- வி. ஏ. பெருமாள்; விளம்பர உறுப்பினர்— எஸ். பழனி, ஏனைய செயற்குழுவினர்கள்:— என். ராஜி, அ. கண்ணன், எஸ். சுப்பிரமணி, என். அண்ணாமலை, ஏ. பி. சின்னராஜி, ஏ. பி. கோவிந்தன், ஏ. பி. ராஜாம்பாள், டி. சதுர்த்தலை, டி. சொக்கலிங்கம், ஏ. தண்டபாணி, எஸ். கந்தசாமி. மேலும் சில செயற்குழு உறுப்பினர்களை சேர்த்துக் கொள்வதென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிவுற்றது. (வி. உ)

## சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"மாலை மணி" சென்னை

# தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

## அனந்தப்பூர்

அனந்தப்பூர், டிச. 13—

அனந்தப்பூர்-தி. மு. க. நகரக் கிளையின் சார்பாக 11-12-49-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30- மணிக்கு, புதூர் பீஸ் மெமோரியல் ஹாலுக்கு அருகிலமைந்த மைதானத்தில், ஓர் பொதுக் கூட்டம் சிறப்பான முறையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் எம். கிருஷ்ணன் அவர்கள் தலைமை வகித்து திராவிடத்தின் பொருளாதார சீர்குலைவு பற்றி விளக்கினர். தோழர்கள் ஜே. பி. இஸக், என். வி. குமாரசாமி, எஸ். கந்தசாமி, எம். என ராஜன் முதலியோர்-தேசியத்தின் பெயரால் நடக்கும் வடநாட்டுச் சுரண்டல் முறை, காங்கிரஸ் சபையினராகிய பலர் செய்யும் பகற்கொள்ளை, பதவி வேட்டை, லஞ்ச ஊழல், கடவுளின் பெயரால் பல கோடி ரூபாய் பாழாகும் விதம், சென்னை அரசாங்கத்தார் செய்யும் முன்னேற்றம் காண முடியாத குடிசைத் தொழில் பற்றியும், பிரகாசா அபிவிருத்தித் திட்டத்தால் பணம் பாழ்படும் விதத்தையும், மத்திய ஆட்சியாளர்களின் நாணய மதிப்புக் குறைவால் ஏற்பட்டு வரும் இன்னல்கள், அயல்நாட்டுத் தூதுவர்களின் ஆடம்பரச்செலவும், பொதுவுடைமையின் உயர்ந்த திட்டங்கள் பற்றியும் விளக்கமாக தக்க சான்றுகளோடு பேசி, தொடர்ந்து நம் இலட்சியங்கள் நிறைவேற பொதுவுடைமையும், தனித்திராவிடமும் காணுவதற்கு தி. மு. க வில் சேர்ந்து பணி செய்ய வேண்டுமென வற்புறுத்திப் பேசினார்கள். இக்கூட்டத்தில் கேரள, ஆந்திரத் தோழர்களும் பெரும்பான்மையோர் கலந்து கொண்டனர். கடைசியாக தோழர் குமாரசாமி நன்றி நவின்ற பின் $7\frac{1}{2}$- மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ)

## காங்கயம்

காங்கயம், டிச. 13—

12—12—49 திங்கள் மாலை 6-மணிக்கு, காங்கயம், புதிய சினிமா கொட்டகையில், கொங்கர்பாளையம், தோழர் குமாரசாமி அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது. சந்தை நாளாக இருந்ததால் பொதுமக்களும், மாணவர்களும் ஏராளமாகக் கூடியிருந்தனர்.

தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர் வா. வ. முத்தையாலு அவர்கள், சிறிது நேரம் தி. மு. கழகத்தின் நோக்கத்தைக் குறித்துப் பேசினார். பின்னர், தோழர் க. அன்பழகன் எம். ஏ., அவர்கள், ஒரு விரிவான சொற்பொழிவாற்றினார்.

அவர் தமது சொற்பொழிவில், இன்று, ஏழை உழவர்களும், மத்தியதரர்களும், கைத்தறி நெசவாளரும், மற்றும் பலதரப்பட்ட உழைப்பாளரும் வறுமைக்கும், பசிக்கும், பட்டினிக்கும் ஆளாகித் துன்பப்படுவதையும், அரசாங்கத்தாரின் போக்கு, ஜமீன்தாரருக்கு எவ்வளவு நஷ்டஈடு தாராளமாகத் தரலாம், முதலாளிகளின் கொள்ளை இலாபத்தை எப்படி விட்டு வைக்கலாம், கோட்டீஸ்வரர்களுக்கு என்னென்ன சலுகை காட்டலாம், அடுத்த தேர்தலிலே வெற்றிபெற இப்பொழுதே காங்கிரஸ்காரர்களுக்கு என்னென்ன வசதி செய்துகொள்ளலாம், உழவர்களை எப்படி மடக்கலாம், தொழிலாளர்களை எப்படி வாயடைக்கலாம், என்பதாக இருப்பதையும், நாட்டிலே, ஏழை மக்களுக்கோ, வைத்தியத்துக்கு வசதியில்லை, கல்விக்கோ வழியில்லை, குந்தக் குடிசைக்கே இடமில்லை, அரைக்குக் கந்தையுமில்லை, அரைவயிற்றுக் கூழுக்கும் நிச்சயமில்லை, ஆனால் ஆளவந்தவர்களுக்கோ, அவர்களால் அனுப்பப்படும் தூதுவர்களுக்கோ ஆடம்பர வாழ்வுக்குக் குறைவில்லை. வீண் செலவுக்கோ எல்லை இல்லை என்பதையும், வரிகளோ வளர்ந்தபடி இருக்க, வாழ்க்கை வசதியோ குறைந்தபடி இருப்பதையும் மானாவாரி சாக்ஸ்—என்ற புது திட்டத்தையும் நிறைவேற்ற வகையற்று திருப்பதையும், மத்திய சர்க்காரோ இராணுவத்தைக் கவனிக்கும் அளவுகூட மக்கள் வாழ்க்கையைக் கவனிக்காமல் இருப்பதையும், வடநாட்டார்களோ தமது அரசியல் ஆதிக்கத்தைக் கொண்டு, தென்னாட்டைத் தமது வியாபாரத்திற்கு மார்க்கெட் ஆக்கிச் சுரண்டுவதோடு தென்னாடு வாழவிடுவதில்லை என்பதையும், மற்றும் திராவிடநாடு பிரிய வேண்டும், தனி யுரிமை எய்த வேண்டும் என்பதற்குரிய காரணங்களையும் விளக்கி, சுமார் $1\frac{1}{2}$ மணி நேரம் சொற்பொழிவாற்றினார்.

தலைவர் தமது முடிவுரையில், தி. மு. கழகத்தில் சேர்ந்து ஆதரிக்கும்படி கேட்டுக்கொண்டபின், செயலாளர் தோழர் முத்தையாலு நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

## தக்கோலம்

தக்கோலம், டிச 8—

இவ்வூர் தி. மு. க. துவக்க விழாக்கூட்டம் நேற்று மாலை மிகச் சிறப்புற நடந்தேறியது. சுற்றுவட்ட கிராமங்களிலிருந்து ஏராளமான மக்கள் வந்து கூடியிருந்தனர்.

கூட்டம் மாலை 6-30 மணிக்குத் துவக்கப்பட்டது. ஆயக்கத் தோழர் ஒருவர் பாட்டு இசைத்தார். கூட்டத்திற்கு சென்னை நகரசபை உறுப்பினர் தோழர் வி. முனுசாமி அவர்கள் தலைமை வகித்தார். தி. மு. க. நோக்கம், கொள்கை, திட்டம் ஆகியவை பற்றியும், தற்கால அரசியல் நிலை பற்றியும் தோழர்கள் கே. ஏ. மதியழகன், இரா. செழியன் ஆகிய இருவரும் பேசினார்கள். தலைவர் முடிவுரையுடன் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவெய்தியது.

## மிதக்கும் பாலம்!



அமெரிக்காவில் ஆறுகளைக் கடக்கப் பயன்படுத்தப்பெறும் மாபெரும் மிதக்கும் பாலங்கள் சிலவற்றுள் படத்தில் காணப்படுவதும் ஒன்றாகும். கான்கிரீட்டினால் செய்யப்பட்ட (உள் குடைவான) அடிக் கட்டைகள் இப்பாலங்களை ஏந்தி நிற்கின்றன. வாஷிங்டன் ஏரியில் மிதக்கவிடப்பட்டுள்ள இப்பாலம் 7,800 அடி நீளமுடையதாகும். யு. எஸ் பசிபிக் கரையிலுள்ள சியாட்டில் நகரையும் மெர்சர் தீவையும் இப்பாலம் இணைக்கிறது. இதனைக் கட்டி முடிக்க 6,000,000 டாலர் செலவாயிற்றாம். இதனைப் பயன்படுத்தும் மோட்டார் சொந்தக்காரர்களிடமிருந்து மட்டுமே கடந்த 9 ஆண்டுகளில் (சுங்கம்) வரி வசூலித்ததில் மேற்படி தொகையைச் சரிகட்டிவிட்டனராம். வாஷிங்டன் ஏரி மிக மிக ஆழமுள்ளதாகையால், நிரந்தரமான பாலம் கட்டுவதனால் நிறைய செலவாகுமெனக் கருதி, இம்மிதக்கும் பாலத்தைக் கட்டி முடித்தனர். உள்ளே குடைவு பெற்ற தண்ணீரின் மேல் பகுதியில் நிற்கும் 65 டன் எடையுள்ள ஐம்பது கான்கிரீட் 'கட்டைகள்' இப்பாலத்தைத் தாங்குகின்றன. இக் 'கட்டை'களுள் சில ஏரிக்கரையோடு சேர்த்து நங்கூரம் பாய்ச்சப்பட்டிருக்கின்றன.

# நூல் நிலையங்கள் பகுத்தறிவுக் களஞ்சியங்களாகவேண்டும்

## மக்களை சிந்திக்க வைப்பதே எழுத்தாளர் கடன்

### கோவையில் தி.மு.க. தோழர்கள் பேச்சு

கோவை, டிச. 12—

கோவை, 11-12—49 ஞாயிறு காலை 9-30 மணிக்கு எடிசன் தியேட்டரில் தியாகராயர் படிப்பக முதலாண்டு நிறைவு விழா, தோழர் க. அன்பழகன் எம். ஏ., அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பொதுமக்களும், தாய்மார்களும் நிறைந்திருந்தனர். வாயிலில் தி. மு. கழகக் கொடிகள் பறந்துகொண்டிருந்தன.

புலவர், சுந்தரராசனார் அவர்கள், திராவிட நாட்டுப் பண்பாடியபின், தோழர் எஸ். ஏ. இராசமாணிக்கம் அவர்கள் முன்மொழிய, தோழர் வெ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வழிமொழிய, தோழர் அன்பழகன் அவர்கள் தலைமையேற்று, தமது முன்னுரையில், தியாகராயர் திராவிட மக்களை முதன் முதல் தட்டி எழுப்பியவரென்றும், அவருடைய கருத்துக்களின் வாரிசாக, இன்றைய திராவிட மக்களின் சமூக சீர்திருத்தக் கொள்கைகளும், அரசியல் கோட்பாடுகளுமாகுமென்றும், அத்தலைவர் பெயரால் படிப்பகம் நடத்துவது மிகவும் சிறப்புடையதாகும் எனவும் கூறினார்.

அடுத்து தோழர் எஸ். ஏ. இராசமாணிக்கம் ஆண்டு அறிக்கை வாசித்தார்.

**டி. கே. சீனிவாசன்**

தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், புத்தக நிலையம் ஒரு பூஞ்சோலை எனவும், அதை நுகரும் வண்டுகள் பல்வேறு வகையிலும், நமது பகுத்தறிவு வளர்த்துக் கொள்ளும் வகையிலே நூல் நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும், புத்தகங்களைப் படித்து வைப்பதற்கு முன்பு இன்ன தன்மையன, இக்கருத்துக்களைத் தருவன எனவும் இராமாயணம், பாரதம் போன்ற பழங்குப்பைகள் அறிவையற்றவையாதலின், புதுமைக் கருத்துக்களை இலக்கியங்களாக்கி மக்களிடையில் வேண்டுமெனவும், எழுத்தாளர்கள், இந்த நாட்டிலும் கூட, ஆதியையும் கடவுளையும் எதற்கெடுத்தாலும் காரணமாகக்கூறி முட்டாள்களாக்கும் மக்களை ஏமாற்றுவதாகுமென்றும், இனியாகிலும், மக்களைச் சிந்திக்கச் செய்யும் வகையில் தமது திறமையைப் பயன்படுத்த எழுத்தாளர் முன்வர வேண்டுமென்றும், கேட்டுக்கொண்டு, சுமார் ஒரு மணி நேரம் அழகாகச் சொற்பொழிவாற்றினார்.

**ஆசைத்தம்பி**

பின்னர் பேசிய, தோழர் ஆ. வ. ப. ஆசைத்தம்பி அவர்கள் தியாகராயர் தொண்டு, அவரது கொள்கை, ஆகியவற்றின் விளைவே இன்றைய திராவிட மக்களின் எழுச்சிக்குக் காரணமென்றும், அரசியலில் — வடநாட்டாரும், சமுதாயத்திலே பார்ப்பனரும் — அடிமைப்படுத்தியுள்ள நிலையிலிருந்து விடுவித்துக்கொள்ள திராவிட மக்கள், மத பேதங்களையெல்லாம் ஒழித்து ஒன்றுபட வேண்டுமென்றும், தியாகராயர் எந்தச் சமுதாயத்திற்காகப் பாடுபட்டாரோ அந்தச் சமுதாயத்தினர் இன்றுவரை தமது கண்மூடிப் பழக்கங்களினின்றும் விடுபடவில்லையென்றும், அவர்களது அறிவுக் கண்ணைத் திறக்கவே, சுயமரியாதை இயக்கம் பாடுபட்டதென்றும் இன்று அந்நோக்கத்தோடு கூடிய தகுதியுள்ள இளைஞர்களெல்லாம் தி. மு. கழகத்தின் மூலம் பணியாற்றுகிறோம் என்றும், தியாகராயர் தோற்றுவித்த இயக்கம் வளர, கொள்கை பரவ இத்தகைய படிப்பகத்தைப் பொது மக்கள் ஆதரிக்க வேண்டுமென்றும், விளக்கமாகச் சொற்பொழிவாற்றினர்.

**க. அன்பழகன்**

அதன் பின் தோழர் க. அன்பழகன் அவர்கள், தமது முடிவுரையில், தியாகராயர் கருத்துக்களை விளக்கியும், அவரால் கேட்கப்பட்ட வகுப்பு நீதியையும், இன்றைய வகுப்பு வாதிகளின் போக்கையும் விளக்கிச் சுமார் ஒரு மணி நேரம் சொற்பொழிவாற்றினார். இறுதியாகச் செயலாளர் நன்றி நவின்ற பின் பகல் 1 மணிக்கு விழா இனிது முடிந்தது.

சென்னையிலிருந்து தோழர் க. அன்பழகனும், திருச்சியிலிருந்து சீனிவாசனும், விருதுநகரிலிருந்து ஆசைத்தம்பியும் அன்று காலை வந்து சேர்ந்தபோது, கோவை நிலையத்தில் தோழர்கள் பட்டிலிங்கம், பக்கிரிசாமி ஆகியோர் வரவேற்றனர். தோழர்களுக்கு தோழர் பட்டிலிங்கம் அவர்கள் இல்லத்தில் விருந்தளிக்கப்பட்டது. (வி-உ)

## குருடர்கள் படிக்கக் கற்க புதுமுறை

பாரிஸ், டிச. 15—

குருடர்கள் வாய்ச்சொல் மூலம் எளிதில் கற்கவும், படிக்கவும் ஒரு புதிய முறையை டாக்டர் மன்டேக் குப்தா என்ற இந்தியர் கண்டுபிடித்திருக்கிறார். இம்முறையைப் பற்றி பாரிஸில் உள்ள ஐக்கிய யூனெஸ்கோ தலைமைக் காரியாலயத்தில் சர்வதேச வல்லுநர் 6 பேர் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். —யூனைடெட்

# போகிற போக்கில்...!

'மலேயா மீது ஐக்கிய ராஜ்ய காலனி ஆட்சியின் குரோதம்'
— செய்தித் தலைப்பு

வேஷ்டி விற்பனை செய்யும் கடைக்காரின் முதலாளித் திமிரில் செய்யும் 'சாகசம்' நயவஞ்சகத்தைக் கவனித்து அடங்காத தொலைத்துவிட்டு யாரோ, வலைவீசுவதென்று ஏமாற்றி, ஆமதாபாத் மில் முதலாளிகள் கலங்குகிறார்களாம்!

* * *

'இறுதியில் சத்தியம் வெல்லும்'
— ஷேக் அப்துல்லா

அந்த இறுதிக் காலத்தை எதிர்பார்த்துத்தான் இது நாள் வரை இருந்து வருகிறோம் பரம்பரம் என்கிறார்கள் பொது மக்கள்!

* * *

'வெட்டிப் பேச்சை நிறுத்தி விட்டு வேலையில் இறங்குங்கள்'
— பண்டிதநேரு

வைத்தியரே, முதலில் உங்கள் வியாதியைக் குணப்படுத்திக் கொள்ளுங்கள்!

* * *

'இந்திய கோணிப் பை விஷயத்தில் யு. எஸ். சிரத்தை'
— செய்தித் தலைப்பு

டாலரை மூட்டை கட்டி அனுப்பவைக்கவா?'

* * *

அமெரிக்காவுக்கு இரு யானைக்குட்டிகள்: விசேஷ விமானத்தில் அனுப்பப்படும்
— செய்தித் தலைப்பு

யானைக்குட்டிகளை அனுப்பும் விசேஷ காரியந்தானே! அமெரிக்கர்கள் ஏறிச் செல்லும் விமானம் 'சொறப' விமானமாக இருக்கும்!

● ● ●

'ஒரு ஸ்திரியை ஏமாற்றி அழைத்து வந்தார். 4 பேர் கைது'
— செய்தித் தலைப்பு

ஒரே ஒரு ஸ்திரீயை மட்டும் ஏமாற்றினார் என்பதற்காகவா?

* * *

"கைக் குத்தல் அரிசிக்கு ஆதரவு"
—செய்தித் தலைப்பு

அதிக வோட்டுகள் எதனால் கிடைக்குமோ? எதிர்த்து நின்றால் குத்தல் (!) அரிசி மனைவி வேண்டியதுதான்!

* * *

சென்னைச் சர்க்கார் துணைச் செயலாளர் மறைவு!
—செய்தித் தலைப்பு

இரண்டுவார காலமாக அவரைக் காணவில்லையென்று பட்டும் தானே இத்தனை செய்தி கிடைத்திருக்கிறது!

பார்லிமெண்ட் முன்பு நடந்த காலித்தனம்: டில்லி காங்கிரஸ் கமிட்டியின் கண்டனம்'

நல்ல காலம், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு வேலையில்லாமற் போயிற்று!

## தோழர் என். வி. நடராசன்

தி. மு. க. தலைமை நிலைய அமைப்புக் குழுச் செயலாளர் தோழர் என். வி. என். 14, 15 தேதிகளில் திருச்சி ... முறை மன்னார் பதிப்பகம் ... மற்றும் ... கிளைக் கழகக் கமிட்டி ... கலந்து பேசினார், 14-ந் தேதி திருச்சியில் மாவட்டச் செயலாளர் அண்ணாத்துரை அவர்களைச் சந்தித்துவிட்டு 15-ந் தேதி சென்னை வந்து சேர்ந்தார்.

## ஜமீன்தார்கட்கு 'தலைட்'த் தொகை

### முற்கூட்டியே தர மசோதா

ஜமீன்தாரி ஒழிப்புச் சட்ட (1948) திருத்த மசோதா ஒன்றை சென்னை சர்க்கார் வெளியிட்டுள்ளனர். ஜமீன்தார்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகையில் ஒரு பகுதியை முன்கூட்டியே தருவதற்காக சட்டத்தின் போக்கு வகுக்கப்பட்டிருக்கிறது இத்திருத்த மசோதா.

## திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

**17-12-49**

| | |
|---|---|
| மணப்பாறை:— | இராமாமிர்தத்தம்மையார், டி. கே. சீனிவாசன், எஸ். நெடுமாறன். |
| காவேரிப்பாக்கம் :— | இரா. நெடுஞ்செழியன், வி. முனுசாமி. |
| களப்பூர் :— | புலவர் கோவிந்தன் பி. ஓ. எல். |

**18-12-49**

| | |
|---|---|
| பவானி :— | ஈ. வி. கே. சம்பத், கே. ஆர். ராமசாமி. |
| சிவகங்கை :— | டி. கே. சீனிவாசன், சி.பி. சிற்றரசு. |
| கோவை :— | என். வி. நடராசன், பி. பழனிச்சாமி. |
| குளத்தூர்:— | ஏ. சித்தையன், மு. கருணாநிதி. |

**19-12-49**

| | |
|---|---|
| மேட்டுப்பாளையம் (திருச்சி):— | என். வி. நடராசன். |
| பட்டிவீரன்பட்டி:— | எஸ். அப்பாவு, எம். அய்யாசாமி, எஸ். முத்து, கே. நடராசன். |

# அல்லாடியாரின் ஆரிய...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நீக்கொண்டிருக்கிற நேரத்தில் இதுபோன்ற பிற்போக்கு பிததலாட்டக் கருத்தை கூற வேத பரம்பரை வழி வந்த அல்லாடியாருக்கு என்ன அகம்பாவமென்று யாருக்கும் கேட்கத் தோன்றுமே! பகுத்தறிவு சுடர்விட்டொளி செய்யும் இவ்விருபதாம் நூற்றாண்டில், பிற்போக்கு சக்திகளெல்லாம் மூலையிலடங்கியொடுங்கி முன்னேற்றக் கொள்கைகளுக்கு வழி விடுவது தவிர வேறு வகையில்லையென்பதை உணரத்தொடங்கிவிட்ட இவ்வறிவுக் காலத்தில், அல்லாடியார் மனு தர்மத்தை நிலை நாட்டப் பார்க்கிறார், அறிவைத்திருடப் பார்க்கிறார், அநியாயத்தை நிறுவப் பார்க்கிறார், அக்கிரமத்தை அரசேற்றப் பார்க்கிறார் அல்லாடியாரென்றே அறிவுடைச் சமுதாயம் கூறும். மார்க்ஸியம் பேசப்படும் காலத்தில், மாசேதுங் ஆதிக்கக் காலத்தில் மனு நீதிக்குப் பரிந்து பேசும் இக்கலியுக 'மனுசிரேஷ்டர்' கடைந்தெடுத்த வஞ்சக வுலகை சிருஷ்டிக்க முனைகிறாரென்பதில் கிஞ்சிற்றும் ஐயமுண்டாவென்று கேட்கிறோம். அறிவாராய்ச்சிக்கு சமாதிகட்ட வேண்டுமென்று கூறிய அல்லாடியார், ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாதென்பதற்காக, பழைய சம்பிரதாயங்களைப் பலியிடுவதா வென ஆத்திரப்படுகிறார். ஒரு குடும்பத்தில், ஒரு தாய் வயிற்றில் பிறந்த ஆணுக்கு பெண்ணுக்கும் சரிசம அந்தஸ்து இருக்கவேண்டுமென்று கூறுவது எந்த வகையில் குறைபட்டதாகும் என்று கேட்கிறோம்? ஆணுக்கொருநீதி, பெண்ணுக்கொரு நீதி வழங்கும் உளுத்துப் போன 'ஆரியமத உபாக்யானம்' இன்னும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திவர வேண்டுமாவென்று கேட்கிறோம். பெற்று வளர்த்த தகப்பன சம்பாதித்து வைத்திருக்கும் சொத்தில், பிள்ளையைப் போலவே பெண்ணுக்கும் உரிமையுண்டு என்று கூறி, பெண்களையும் சொத்துரிமையுடையோராக்கி தன்னம்பிக்கைக் கொண்டு திகழ சட்டம் செய்வதில் என்ன தீங்கும், தொல்லையும் வந்து விடப் போகிறதெனக் கேட்கிறோம். ஆண்டாண்டு காலமாக ஆட்சி செய்துவரும் அநியாயத்தைக் களைய முன் வருவது அக்கிரமமென்கிறாரா, அல்லாடியார் எனக் கேட்கிறோம்.

பெண்களுக்கு சொத்துரிமை வழங்கி விட்டால், ஒரு தாய் வயிற்றில் பிறந்த ஆண், பெண்களு இடையே (சகோதர—சகோதரிகளுக்கிடையே) அன்பு நீடிக்காது, தகராறும் பொச்சாப்புமே வளருமென்கிறார் அல்லாடியார். சட்ட வல்லுநரின் வாதத்தை இது வென கேட்கிறோம்! தங்கைக்கு சொத்தில் ஒருபகுதி கொடுத்து விட்டால், அண்ணனுக்கு ஆத்திரமா வந்து விடும்? இவ்வறையரில்லையில சகோதர-சகோதரிகளுக்கிடையில் அன்பு இருந்து வருவதற்குக் காரணமே, சொத்தில் பங்கு கேட்காது, கணவன் வீடு போய் விடுவதுதானா வென்று கேட்கிறோம் உடன்பிறப்பாளர் களிடையே அத்துணை மோசமான மனப்பான்மை இருக்க முடியுமா? அல்லாடியார் கூற்றை வாதத்துக்காக ஏற்றுக்கொள்வோம். அண்ணன், தம்பி இருவர்கள் தங்கள் தந்தை சொத்தைப் பகிர்ந்து கொண்டு பிறகு அன்பற்ற மரக்கட்டைகளாகவா திகழ்கின்றனர்? அன்பற்று தன் பிரிந்து போய் விடுகிறார்களென அல்லாடியார் கூறுவாரேயாகில், சொத்து காரணமாக அவர்களிடை மட்டும் தகராறு மனோபாவம் வரலாமாவென கேட்கிறோம்! உடன்பிறந்த அவர்களுக்குள் மட்டும் தகராறு வரலாமென்று அல்லாடியாரின் சட்ட புத்தகம் கழறுமேல், அண்ணன்—தங்கைக்கிடையே அன்பு குறைந்துபோய் விட்டால் தான் என்ன குடி முழுகி போய்விடுமெனக் கேட்கிறோம். சொத்து காரணமாக முளைக்கும், அல்லது இல்லதொழியும் அன்புக்கு அன்பென்றுபெயர்வியாபாரமென்றல் சாலப் பொருந்தும்? பெண்களுக்கு சொத்துரிமை கொடுத்துவிட்டால்; பிள்ளைப் பேற்றுக்கு அவர்கள் தாய்வீடு வர முடியாதெனத் 'திகிடுதத்த'வாதம் புரிகிறார் அல்லாடியார்! இப்பொருளற்ற வரட்டு வாதத்தைப் பிள்ளைகள் கேட்டால்கூட சிரிக்குமே! பிள்ளைப் பேற்றுக்குத் தாய் வீடு போக முடியாதென்பதற்காக, பிறப்புரிமையில் ஒரு அம்சமாகிய சொத்துரிமையை இழந்துவிட முடியுமா ஒரு பெண் என்று கேட்கிறோம்? தாய் வீடு போவதெதற்கு தனது கணவன் வீட்டிலேயே பிள்ளைபேற்றை நடத்தினால் என்ன மாபாதகம் வந்தா சூழ்ந்து விடுமெனக் கேட்கிறோம். அறிவும் ஆராய்ச்சிகளும் பெருகிவரும் இந்நாளில், அல்லாடியாரின் இப் 'பிள்ளைப் பேற்று விஷவாதம்' கவைக்குதவா கருத்தற்ற வாதமே யென்பதற்கு இன்னுமா விளக்கம் வேண்டும்?

இந்துசமுதாயக் கோட்பாடுகள் சீரழிந்துவிடும், சட்டம் செய்வதில் சர்க்கார், மக்கள் (மத) உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென கூறுகிறார் அல்லாடியார். எடப்படியம் நாம் இந்துக்களாயிற்றே, பெண்களுக்குச் சொத்துரிமைவழங்குவதுபுத்தகம் ஷாஸ்த்திரங்களை மாற்றி விடுங்களென அணை பிறக்கிறார் 'பிராமணத்தமா'! இந்து சமுதாய சீர்திருத்த சம்பந்தமாக 19-ம நூற்றாண்டு ஆரம்ப காலமுதல எத்தனைச் சட்டங்கள் உருவாகி அமுல் செய்யப்படவில்லையா? அதனால் இந்து மத சமுதாயத்தின் நாற்றம் சிறுக சிறுக குறையவில்லையே, வேறென்ன நடந்துவிட்டது தவிர, அல்லாடியார் கூறுவதுபோல களங்கமோ அசம்பாவதமோ நேரிட்டதாகக் கூறமுடியுமா? இந்து மதத்தின் தனித்தன்மை, (!) எந்த மூலையில ஒடுங்கிப் போய் விட்டதென கூற முடியுமா அல்லாடியார்? சதி (உடன்கட்டை ஏறுதல) ஒழிப்புச்சட்டம், வாரிசு சம்பந்தமான குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம், விதவை மறுமணச் சட்டம், குறைகள் விலக்கு மசோதா ... உரிமைச் சட்டம், சாரதாச் சட்டம், தேஷ்முக மசோதா, பர்கட்டம் இன்னபிற சமூக சீர்திருத்தச் சட்டங்கள் 1829 முதல் இது காலம் வரை ஒவ்வொன்றின் பின் ஒவ்வொன்றாகச் செய்யப்பட்டு வருகின்றனவே, இவற்றால் இந்து சமுதாயத்துக்கு என்ன கெடுதி வந்துவிட்டதென்று கேட்கிறோம் இந்த கமாலத்தின் துர்நாற்றத்தைப் போக்க மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களே தாமே இவை மேற்கண்ட சட்டங்களால் கெடாத இந்து மதம், இன்னுங் கூடப் போனால் ஓரளவு சுத்திபெற்ற இந்து மதம் இன்றைய மசோதாவால் கெட்டொழிந்து போய் விடுமென அல்லாடியார்கள் கதறுவதில் அர்த்தமிருக்க முடியுமா?

மக்களின் வாழ்க்கை முறைக்கு வழி காட்டியாக அறிவுடன் படட பாதையில் அவர்கள் நடந்து செல்ல துணை செய்யும் கருவியாக இருக்க வேண்டியதுதானே ஒரு மதத்தின் நோக்கமாக இருக்க முடியும்! மதத்திற்கு மார்க்கம் என்ற வொரு பெயர் இருப்பதின் உட்பொருளும் இதுவாகத்தானே இருக்கக்கூடும்! மக்களுக்குத் தானே மதம்! மதத்துக்கல்லவே மக்கள்! அப்படியிருக்க, காலத்துக்கேற்ப, அக்கோட்பாடுகள் மாறித்தானே தீர வேண்டும்! மாறு விட்டால் மக்களே தங்கள் சொந்த வசதிக்கேற்ப வாழ்க்கையை அமைத்துக்கொண்டு நடக்கத் தானே முற்படுவர். இதை 'அல்லாடியார் திருக்கூட்டம்' அணைபோட்டுத் தடுப்பதெப்படி நேர்மையும்நல்ல முறையும் பொருந்துமாகும்?

சாஸ்திரமும் சம்பிரதாயமும், புராணமும் புரட்டும் ஆட்சி செய்த காலம் இனியும் நீடிக்க முடியாது; இனி வந்து கொண்டிருப்பது மக்களாட்சிக் காலம், அறிவாராய்ச்சி அரியணையேறப் போகும் காலம்! அல்லாடியார்கள் அடங்கிவிட வேண்டியதுதான்!

## ஷேக் அப்துல்லாவைக் கொல்லச் சதி?

லண்டன், டிச. 15—

காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லா லண்டனில் விமான மூலம் வந்து இறங்கியதும் இறங்காததுமாக முக்கியமான சில அலுவல்கள் இல்லாது உடனே காரில் ஏறிச் சென்றது அவரைக் கொன்றுவிடுவதாக பயமுறுத்தல்கள் கிடைத்ததின் விளைவாக இருக்கவேண்டும் என்ற வதந்திகள் இருந்து வருகின்றன.

எவ்வித ஆபத்துமின்றி அவர் அமெரிக்காவுக்குப் பயணப்பட்டார் வேண்டும் என்று ஒரு விமான நிலைய அதிகாரி கூறியதாகச் சொல்லப்படுகிறது.

ஷேக் அப்துல்லாவுக்கு ஆபத்து எதுவும் நேர்க்கூடும் என்று சொல்லப்படுவதை இந்தியா ஹவுஸ் அதிகாரி ஒருவர் மறுத்தார். எவ்வித ஆபத்தும் அவருக்கு ஏற்படும் என்று நாங்கள் நினைக்கவில்லை என்றும் அவர் ஹோட்டலில் தங்கியிருக்கிறார் என்றும அவர் பிரயாணத் திட்டப்படி லேக்ஸ ஸக்ஸஸுக்குப் புறப்படுவார் என்றும் அவர் தெரிவித்தார். —ரூடேர்


# அறிவு/நாட்குறிப்பு 1950

அண்ணாவின் மூவர்ணப் படத்துடன் கூடிய அட்டை! புதிய முறை! அழகிய பதிப்பு

பையடைக்க அளவு

சென்னைப் பகுதிகள் விளக்கம் — மருத்துவ விடுதிகள் பஸ் வழி விளக்கம் முதலிய குறிப்புகள் அடங்கியது

விலை — இரண்டணாதான்

தேவைக்கு முந்துங்கள்!

அண்ணா நூல்கள்

| | |
|---|---|
| அண்ணாவின் அறிவுரைகள் ... | 0—3—0 |
| அண்ணாவின் அறைகூவல் ... | 0—3—0 |
| அறநிலையங்கள் ... | 0—6—0 |
| நூல்நிலையங்கள் ... | 0—3—0 |
| பொருள் ... | 0—4—0 |
| அறிஞர் அண்ணாத்துரை ... | 1—4—0 |
| மூலபலம் முறிகிறது ... | 0—8—0 |
| மகாகவி பாரதியார் ... | 0—6—0 |
| என்னைக் கவர்ந்த புத்தகங்கள் ... | 0—2—0 |

நெடுஞ்செழியன்

| | |
|---|---|
| மனப்போக்கு மாரவேண்டும் ... | 0—2—0 |
| புதிய பாதை ... | 0—8—0 |
| கம்பரும் வம்பரும் ... | 0—4—0 |
| சமத்துவம் ... | 0—2—0 |

விற்பனைக் கழிவு 25% செலவு இனாம்

தனிப் பிரதிக்கு முன் பணம் அல்ல தபால்தலைகள் அனுப்பவும்

முன்னேற்றப் பண்ணை, 2/12, பிராட்வே, சென்னை—1


# வானொலி

(17-12-49 சனிக்கிழமை)

சென்னை

[211·3 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 எஸ். ஜானகி—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ.த.)

பிற்பகல்:

1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 சிறுவர் நிகழ்ச்சி

மாலை:

4-00 குழந்தைகளுக்கு (ஆங்கிலம்)
5-30 ராஜேஸ்வரி சேனன்-வீணை
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 ஆர். ஜெயலக்ஷ்மி—பாட்டு

இரவு:

7-00 ... முத்தண்ணா—வயலின்
7-15 தமிழில் செய்திகள்
7-30 சினிமாப் பாட்டுகள்
7-45 விஸ்வநாதய்யர்—பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 ஆங்கிலப் பேச்சு
9-30 ராஜகோபாலசர்மா (இ.த.)
10-30 முடிவு

திருச்சி

[396·8 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 எச். எஸ். கிருஷ்ணராவ்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 என். மதுரம்— வயலின்
8-30 காலை இசை (இசைத்தட்டு)

பிற்பகல்:

1-00 என். மதுரம்— வயலின்
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 பல்கலைக் கழகங்களுக்கு (ஆங்கிலம்)

3-00 தமிழில் செய்திகள்
3-10 பல்கலைக் கழகங்களுக்கு (காலேஜ் கியூஸ்)

மாலை:

5-00 எச். எஸ். கிருஷ்ணராவ்—பாட்டு
5-40 கே. பி. ...—சாக்ஸபோன்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 இசைநாடகம் (இசைத்தட்டு)
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:

7-... ...
7-30 செய்தி விளக்கம்
7-45 சென்னையில் உள்ளபடி
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 சென்னையில் உள்ளபடி
9-35 இசைவேளை (இசைத்தட்டு)
10-00 முடிவு

## ஐ. நா. முடிவை ஆக்கிரமிக்கிறது இஸ்ரேல்!

டெல அவிவ், டிச. 14—

ஜெருசலத்தை சர்வதேசக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர, ஐ. நா. முடிவு செய்திருப்பதை முட்டுக்கட்டைப்போட்டுத் தடுக்க, இஸ்ரேல் தன் தலைநகரை டெல்அவிவிலிருந்து ஜெருசலத்திற்கு மாற்றுவது என்று இஸ்ரேல் பார்லிமெண்ட் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

## "மைலேடிஸ் கார்டன்" மூடப்படும்

சென்னை, டிச. 16—

சென்னை பீபிள்ஸ் பார்க்கிலுள்ள 'மைலேடீஸ் கார்டன்" ஜனவரி 1-ந் தேதி முதல் தற்காலிகமாக மூடப்படும். பிப்ரவரியில் நடக்கவிருக்கும் "பிளவர் ஷோ"விற்கான முன்னேற்பாடுகள் செய்வதற்காகவே மூடப்படுகிறதென அறிவிக்கப்படுகிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2-45, Muthumari Chetty Street, Madras-1.